# நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி




**மார்த்தாண்டம் :** மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் இளையோர் நலன் மற்றும் கவின்கலை மன்றமும், நாகர்கோவில் ரோட்டரி கிளப்பும் இணைந்து ஓணம் விழா நடத்தினர். இந்நிகழ்வில் அத்தப்பூ கோலமிடல், திருவாதிரை நடனம், மலையாள மங்க, கேரள ஸ்ரீமான் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. வெற்றி பெற்றவர்களுக்கு கல்லூரி தாளாளர் பிரவின் பரிசுகளை வழங்கினார். கல்லூரி முதல்வர் பிஜி நிகழ்வுகளுக்கு தலைமை வகித்தார். ரோட்டரி கிளப் தலைவர் ஜயா குட்டி, செயலர் ஜான், வழக்கறிஞர் ஷாகிலா பிரவின் ஆகியோர் கல்லூரி வளாகத்தில் மரங்கன்றுகளை நட்டனர். பேராசிரியர்கள் ஜோயல் கீன்ஸ் மற்றும் கீதா நிர்மல் ஆகியோர் விழா நிகழ்வுகளை ஒருங்கிணைத்தனர்.